28th September 1961]

Sri S. PAKKIRISWAMY PILLAI : பீடித்தொழிலாளர்களுக்கு உண்டான சட்டத்தை சரிவர நிர்வகிக்க எத்தனை லேபர் ஆபீசர்கள் சென்னையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் ? அவர்கள் மாதாந்திர ரிப்போர்டு அரசாங்கத்திற்கு கொடுத்துக்கொண்டு வருகிறார்களா ? இந்த ரிப்போர்டுகளை இந்தச் சபையின் முன்னால் வைக்க முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும். பீடித்தொழிலாளர்களுக்கு என லேபர் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. இருக்கிறவர்களை வேண்டுமானால் அதிகப்படுத்தப்படும். மற்ற விவரங்களுக்கு தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

Sri M. KALYANASUNDARAM : ஸார், தொழிற்சாலைக்கு வெளியே சொந்த இடத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களை பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று, பீடி உற்பத்தி செய்யக்கூடிய முதலாளிகளுக்கே ஏன் உத்திரவு பிறபிக்கவில்லை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப் பற்றித் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

Cement Factories

* 1874 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. Minister for Home be pleased to state—

(*a*) the total number of cement factories working in the State as on 1st June 1961;

(*b*) the capacity of all the factories;

(*c*) the actual production for the year 1960–61;

(*d*) whether any new factory will be started in the State; and

(*e*) if so, when and where?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Four.

(*b*) The licensed capacity of the four factories is 15,08,910 tons per annum.

(*c*) 11,19,624 tons.

(*d*) *and* (*e*) The Government of India propose to grant a licence for the establishment of a new cement factory in Sankaridrug taluk, Salem district.

Sri M. KALYANASUNDARAM : ஸார், 11 லட்சம் டன்னுக்கு அதிகமாக நம்முடைய ராஜ்யத்திலே உற்பத்தியாகிறது என்று சொன்னார்கள். நம்முடைய ராஜ்யத்தின் தேவை எவ்வளவு ? இந்த சிமெண்டு வெளியே விநியோகிக்கப்படுகிறதா ? பற்றாக்குறை இருந்தால், அந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப்பற்றித் தனியாக கேள்வி வேண்டும். எவ்வளவு நம் தமிழ் நாட்டிற்குத் தேவை இருக்கிறது என்பதற்கு அப்போது பதில் சொல்லலாம். மொத்தத்திலே நமக்கு சிமெண்டு அதிகமாக வேண்டியிருக்கிறது. அதனால் பொதுவாகவே நாட்டிலே பற்றாக்குறை இருந்து வருகிறது. அதற்காகத்தான் புதிதாக சங்ககிரிக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இரண்டு சிமெண்ட் ஆலைகள் கரூர் பக்கத்திலே அமைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

[28th September 1961

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, can the Hon. Minister tell us whether we are sending cement to other States and at the same time are we also getting cement from other States?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, the whole thing is in a pool and whatever is available is distributed.

Sri T. S. RAMASWAMI : Sir, may I know whether any application for licence has been received by the Government for starting a factory in Ramanathapuram district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir. The applications relate to Tiruchirappalli district. One licence that has been granted is for Salem district. Recently in Thulukkapatti in Ramanathapuram district a cement factory has been opened.

Sri K. RAMACHANDRAN : சமீபத்தில் இராமனாதபுரம் கலெக்டர் அவர்கள் கொடுத்த ஒரு அறிக்கையிலே மண்டபத்தில் ஒரு சிமெண்டு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக கண்டிருந்தது. மண்டபத்திற்குப் பக்கத்தில் ஜிப்ஸம் லைம்ஸ்டோன் முதலிய பொருள்கள் கிடைத்து, அவைகள் துலுக்குப்பட்டிக்கு சென்று கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, கிழக்கு ராமனாதபுரம் தொழில்துறையில் பின்தங்கியிருப்பதால் மண்டபத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இம்மாதிரி யோசனைகள் அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டுத் தான் வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவது போல பாம்பன் பக்கத்தில் ராமேசுவரத்திற்கு சுற்றுப்பக்கத்தில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்படலாம் என்ற யோசனை வந்தது. 1,65,000 டன் வருஷத்திற்கு உற்பத்தி செய்யலாம் என்று ஒருவர் மனுப் போட்டார். அந்த மனுவும் இப்பொழுது மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

Sri T. IRUSAPPAN : புதிதாக அமைக்கப்போகும் சிமெண்டு தொழிற்சாலை தனியார் துறையிலா அல்லது கூட்டுறவு முறையிலா அல்லது சர்க்கார் எடுத்து நடத்த உத்தேசமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சிமெண்டுத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலே தனியார் துறையிலே அமைக்கப்படுகிறது.

Sri K. B. S. MANI : சிமெண்டுத் தொழிற்சாலைக்கு தேர்ந்தெடுக்கிற இடங்கள் சர்க்கார் அதிகாரிகளால், நிபுணர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்னென்ன இடத்தில் செய்யலாம் என்று அறிமுகப்படுத்தபடுகிறதா ? இடம் தேர்தல் செய்கின்ற நிபுணர்கள் குழுவிற்கான செலவுகள் தொழிலை ஆரம்பிக்க இருக்கும் தனிப்பட்ட முதலாளியினுடைய சொந்த செலவில் செய்யப்படுகிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முதலில் எங்கே அத்தகைய தொழிற்சாலைகள் வைக்கிறது என்பது அரசாங்கத்தின் அக்கறை பொறுப்பு. ஜியலாஜிகல் சர்வேயைக் கொண்டு பரிசீலனை செய்து, மூலப் பொருள்கள் எங்கு கிடைக்கும் என்று பார்த்து, அதற்குப் பிறகு தனிப்பட்டவர்கள் அப்ளிகேஷன் போடுகிறார்கள். முன்னால் இடத்தைப் பார்த்து பரிசீலனை செய்த செலவைக்கூட அவர்கள் கொடுக்கவேண்டும் என்று கேட்பது முறையல்ல.

Sri M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள் பதில் கூறும் பொழுது புதியதாக சேலம் ஜில்லாவில் சங்கரிக்குப் பக்கத்தில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது

28th September 1961]

என்று சொன்னார்கள். இப்பொழுது கூறும்பொழுது திருச்சி, ராமநாதபுரம், மண்டபத்திற்குப் பக்கத்தில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன? சங்கரி பக்கத்தில் ஆரம்பிக்கப்பட் இருக்கும் தொழிற்சாலை என்ன ஸ்டேஜில் இருக்கிறது? திருச்சி, பாம்பன் பக்கத்தில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலை என்ன ஸ்டேஜில் இருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சங்கரி பக்கத்தில் ஏற்பட இருக்கும் தொழிற்சாலை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். பாம்பன் பக்கத்தில் ஏற்பட இருக்கும் தொழிற்சாலை பற்றி இனிமேல் தான் தெரியும்.

Industries (Coimbatore district)

* 1875 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to start new industries in the public sector and private sector in Coimbatore district during Third Five-Year Plan;

(*b*) if so, the details thereof;

(*c*) whether there is any proposal to give technical and financial aid to industries to be started in Coimbatore district during the Third Five-Year Plan; and

(*d*) if so, the details thereof.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*d*) A statement[a] is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : ஒவ்வொரு ஜில்லா தலைநகரத்திலும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் வைக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூரில் மட்டும் வைக்காததற்குக் காரணம் என்ன? அங்கே வைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோயம்புத்தூர் ஜில்லாவில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் இல்லை அல்லது வைப்பதற்கு உத்தேசிக்கவில்லை என்பது சரியல்ல.

SRI N. K. PALANISAMI : Sir, this is an important question. I want to put some more supplementaries.

DEPUTY SPEAKER : I know that this is an important question. That is why I allowed you to put a supplementary question.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுவாக தொழில் துறையிலே தொழில் நடத்துகிறவர்களுக்கு என்ன வசதி கொடுக்கப் படுகிறது என்பது கேள்வி. ஆகையால், இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் எங்கெங்கே வைத்தோம், வைக்கவில்லை என்பது இந்தக் கேள்வியில் எழவில்லை.

Alloy Steel Factory for Salem

* 1876 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to open a factory for manufacture of alloy steel in Salem;

---

[a] Printed as Appendix I on pages 302-303 infra.